யாதும் ஊரே
யாவரும் கேளிர்



Lettre du
# CERCLE CULTUREL DES PONDICHERIENS

* * * * *

புதுச்சேரியர் கலை மன்ற
மடல்

# N°3

**Décembre 1993**

**MPT des Amonts**
**91940 LES ULIS**

## Le mot du président

Grâce à l'heureuse initiative de Mr. PIEDNOIR, nouveau membre dans notre association, cette lettre du C.C.P. N°3 peut paraître en deux langues. Au nom de tous les autres membres, je tiens à le remercier publiquement.

Avec ce nouveau coup de pouce donné, j'espère que désormais, la lettre du C.C.P. pourra être publiée régulièrement en 1994, une fois par trimestre par exemple. Toute suggestion concernant la forme définitive à lui donner, et le type d'informations et articles à faire paraître, est naturellement bienvenue.

Notre prochaine réunion générale, fixée au :

**Samedi 18 Décembre 1993 à 16 h**
**à la Maison Pour Tous des Amonts - Les Ulis**

sera une bonne occasion de nous retrouver ensemble après de longs mois, et de débattre aussi et surtout des activités futures de notre jeune association.

Bonnes Fêtes a tous !

M.G.

"இந்திய மொழியைப் படிக்கும் பிரான்சு தேசத்தவன் ஒரு பைத்தியக்காரன் !" என்று சென்ற ஆண்டில் நான் சொன்னேன்.

இப்பொழுது, நான் பைத்தியமாய் இருக்கிறேன் ! ஆனால், எனக்கு இந்தப் பைத்தியம் மிகவும் இனிப்பாய் இருக்கிறது.

பெரும் செல்வம் ஓர் இரும்புப் பெட்டியில் மூடப்பட்டிருந்தது. எனக்கு என் நண்பர்கள் அதைத் திறந்தார்கள்.

"நன்றி !", என்று எல்லாருக்கும் சொல்கிறேன்.

கரிகாலன்.

# நடப்பதும், நடக்கவிருப்பதும்

சுமார் பத்து மாதங்களுக்குப் பின் இப்போது இம்மூன்றாவது மலர் இதழைத் தொடர வாய்ப்பமைந்துள்ளது. இதற்குக் காரணமாக இருக்கும் நம் புதிய அங்கத்தினர் திரு.கரிகாலன் அவர்களுக்கு நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த வருட முதலில் நடந்த பொங்கல் திருவிழாவையடுத்து ஜூன் மாத முதலில் நடைபெற்ற **"Fête du quartier des Amonts"** - ல் நாம் முன் போல் அதிகம் பங்கேற்கா விட்டாலும், **Ulis** ஊரார் மனம் நிறைவுறும் வகையில் நம் தமிழ்நாட்டுக் கிராமியக் கலைகளான காவடி, புரவியாட்டம், அனுமானாட்டம் இவைகள் நன்கு அமைந்தன.

செப்டம்பர் மாதம் முதற்கொண்டு மீண்டும் சனிக்கிழமைகளில் தமிழ் வகுப்புகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. நவம்பர் மாதத்தில் புதிதாக வந்து சேர்ந்துள்ள இரு மாணவர்களுடன், பழைய மாணவர்களும் தொடர்ந்து வந்து கவனத்துடனும், ஊக்கத்துடனும் படித்துப் பயனடைந்தால் அவர்களுக்குப் பெரு நன்மையாக அமையும்.

மகாராட்டிர மாநிலத்தில் ஏற்பட்ட எதிர்பாராத நிலநடுக்கத்தால் உண்டான உயிர்ப்பலி, பொருட்சேதம் பற்றியெல்லாம் அறிந்திருப்பீர்கள். அம்மக்களுக்குத் தம்மால் இயன்ற பணவுதவியைச் செய்யும் வகையில் நம் மன்ற அங்கத்தினர்களிடம் பேசி, அவரவர் விருப்பத்திற்கிணங்க கொடுத்ததில் **1100** பிராங்குத் தொகை சேர்ந்தது. இத்தொகையுடன் மன்றத்தின் சார்பாக **1100** பிராங்குகளைப் போட்டு, மொத்தம் **2200** பிராங்குகளைக் காசோலையாக இந்தியத் தூதுவர் திரு . **C.V.** இரங்கநாதன் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஒவ்வொரு வருட முடிவிலும் நடந்து வரும் கூட்டம் இம்முறை

## "M.P.T. des Amonts" - ல்

**18.12.93** சனிக்கிழமை மாலை **16** மணிக்கு

நடக்கவிருக்கிறது. மன்ற அங்கத்தினர் அனைவரும் வந்து பங்கேற்று நடப்பதையும், நடக்கவிருப்பதையும் பற்றிப் பேசி முடிவெடுப்போம்.

கோ.சு



**FACE HUMAINE ET PERROQUET**
**Maharaja Serfoji's Saraswathy Mahal Library - THANJAVUR**

Extrait du traité de physiographie de Charles Le Brun (France 18ème siècle).
Comparaison entre la face humaine et le perroquet, tentant d'en expliquer le caractère et le comportement...